முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1335

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.05.2023**, வெள்ளிக்கிழமை

1. தர்மனே ஞானத்தின் தலைவனே
   தவபலமாய் மக்களுக்கு வரம்தருகின்ற
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   அண்ணலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
   உரைத்திடுவேன் சோபகிருது விடை திங்கள்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 12 ம் நாள், 26.05.2023, வெள்ளிக்கிழமை)
   தானதர்ம சக்திப் பெருகபெருக
   தவசி உன்வழி உலகம் வயமாகி
3. ஆகியே உலகோரெல்லாம்
   ஆற்றல்பட ஞானவான்களாக
   மாற்றம் கண்டு அரங்கன் உன் வழி
   மண்ணுலகை காக்கும் சக்திகளாக மாறுவரப்பா
4. அப்பனே இந்தவித அற்புதத்தை
   அரங்கனே உன் சீடர்களைக்கொண்டு
   தப்பாது உலகமெல்லாம் வழி நடத்துகின்றேன்
   தர்மத்தை உலகமெங்கும் பரப்புகின்றேன்
5. ஆகவே தர்மம் வளர்ந்தால் போதும்
   அரங்கன் நோக்கம் வெற்றியாகும்
   தொண்டர்கள் உலகமெல்லாம் நிரம்பி தொடர்ந்து தர்ம சிந்தை கொண்டு
   எந்தன் நாமஜெப பலத்தோடு இனிதே அரங்கனை மனதில் எண்ணி
6. எண்ணியே தர்மவேலியிட்டு வந்தால் போதும்
   எங்கும் உலகமாற்றமாக இனிதே
   தர்மஞான ஆட்சிக்காலம்
   தவராஜன் வேண்டல்வழி இனிதே நடந்தேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–